DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC.161/2016<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.3 |
| Name | : | ஸ்ரீகாந்த் |
| Father's /Husband Name | : | ஆறுமுகம் |
| Village | : | ராமாம்பாள்புரம் |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day September 2019

**முதல் விசாரணை.**

நான் மதுக்கூர் ராமாம்பாள்புரம் கிராமத்தில் வசித்து வருகிறேன் ஆசாரி வேலை பார்த்து வருகிறேன். 19.07.2015 அன்று மதியம் 02.15 மணியளவில் கொடியரசு என்பவர் கிழக்கிலிருந்து மேற்கே இருசக்கரவாகனத்தில் வந்து கொண்டிருக்கும் போது எதிர்திசையில் வந்த 407 மோதிவிட்டது. கொடியரசு பலத்த அடி ஏற்பட்டது. மேற்படி சம்பவத்தை கலையரசன், நடராஜன் ஆகியோர் பார்த்து கொடியரசனை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் அங்கு பார்க்க முடியாது என்பதால் தஞ்சை மருத்துவக்கல்லூரிக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் தஞ்சை மருத்துவமனைக்கு போகும் வழியில் இறந்துவிட்டார். மேற்படி 407 வாகனத்தை ஓட்டியவர் இளங்காட்டை சேர்ந்த முருகேசன் என்பதை விசாரித்து தெரிந்துகொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வாகன விபத்தல் இறந்துபோன கொடியரசனை எப்போதிலிருந்து தெரியும் என்றால் சிறுவயதிலிருந்தே தெரியும். அவர் எனக்கு உறவுகாரர் தம்பி முறை வேண்டும். நான்

A ஸ்ரீகாந்த்

எத்தனை மணிக்கு விபத்து குறித்து கேள்விபட்டேன் என்றால் மதியம் 02.20 மணிக்கு கேள்விபட்டேன். யார் மூலமாக விபத்து குறித்து கேள்விபட்டேன் என்றால் மதுக்கூரைச சேர்ந்த தேவகி என்பவர் மூலம் கேள்விபட்டேன். கேள்விபட்டு எவ்வளவு நேரத்தில் அங்கு சென்றேன் 10 நிமிடத்தில் சென்றுவிட்டேன். என்னுடன் வேறு யாரும் அங்கு வரவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற இரு வாகனங்களுமே அங்கு இருந்ததா என்றால் இல்லை இறந்தவர் எடுத்து சென்ற இருசக்கர வாகனம் மட்டுமே இருந்தது. திசை தெரியுமா என்றால் தெரியாது. விபத்திற்குள்ளானவர் ரோட்டிற்கு வடக்கு பக்கத்தில் இருந்தார். விபத்தை ஏற்படுத்திய 407 வாகனம் சம்பவ இடத்தில் இல்லை. நானும் மருத்துவமனைக்கு கொடியரசனை அழைத்து சென்றேனா என்றால் இல்லை. சம்பவத்தை பார்த்த கலையரசன் போலிசாருக்கு போன் செய்து தகவல் சொல்லவும் போலிசார் வந்த பின்னரே கொடியரசனை ஆம்புலன்சில் அழைத்து சென்றனர். கொடியரசனை ஆம்புலன்சில் ஏற்றியதை நான் பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய 407 வாகனம் என்ன ஆனது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் கழித்து நான் போலிசாரை பார்த்தேன் என்றால் இல்லை சம்பவத்தன்று இரவு நான் காவல்நிலையம்ட சென்றேன் அதன் பிறகு கேரளா சென்றுவிட்டேன். அப்போது போலிசார் என்னிடம் பெயர் மற்றும் விலாசம் கேட்டார்கள், வேறு எதுவும் கேட்கவில்லை. நான் போலிசாரிடம் கொடியரசனின் மீது மோதிய வண்டியின் பதிவெண், மோதிய நபரின் பெயர் உள்ளிட்ட விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொடியரசனின் சகோதரர் கலையரசன் என்னை அழைத்து கொண்டு சம்பவத்தன்று இரவு காவல்நிலையம் சென்றார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

A ஸ்ரீகாந்த்

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து /படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

87

| | | |
|---|---|---|
| Case No. | : | CC.161/2016<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.4 |
| Name | : | ராஜலிங்கம் |
| Father's /Husband Name | : | ராமன் |
| Village | : | ராமாம்பாள்புரம் |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day September 2019

**முதல் விசாரணை.**

நான் ராமாம்பாள்புரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். 19.07.2015 அன்று மதியம் 02.15 மணியளவில் கொடியரசன் என்பவர் மதுக்கூர் சிவகொல்லையில் இருந்து முக்கூட்டு சாலைக்கு கிழக்கிலிருந்து மேற்கே இரு சக்கரவாகனத்தில் சென்றபோது அவருக்கு எதிரே வந்த டாட்டா 407 வாகனம் இடது புறமாக் வந்த கொடியரசன் மீது அதிவேகமாக வந்து மோதியது. அதில் அவருக்கு தலையில் பலத்த காயம்ஏற்பட்டது. பக்கத்தில் இருந்த வாட்சாகுஞ்சி காலவணியில் கலையரசனும், நடராஜனும் பேசிகொணடிருந்தார்கள் கொடியரசன் அடிபட்டதை பார்த்து ஆம்புலன்சிற்கு போன் செய்துபட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு பார்க்க முடியாது என்பதால் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் அப்போது போகும் வழியிலேயே கொடியரசன் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

R. Rajalingam

குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை 10 நிமிடம் கழித்து தான் அங்கே போனேன். நான் சம்பவ இடத்திற்கு போகும் போது விபத்தில் காயம்பட்டவர் அந்த இடத்தில் இல்லை. எனக்கு சம்பவம் குறித்து யார் சொன்னார்கள் என்றல் மருது என்ற நபர் சொன்னார். சம்பவ இடத்திலிருந்து புறப்பட்டு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு போனேன் அங்கே தஞ்சை சென்றுவிட்டதாக சொன்னதால் நான் எனது பைக்கிலே தஞ்சைக்கு சென்றேன். கொடியரசன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் கொடியரசன் எனக்கு உறவுமுறை இல்லைஆனால் பழக்கம். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் தஞ்சை மருத்துவமனையில் விசாரித்தார்கள் அப்போது சம்வத்தை பற்றி சொன்னது கலையசரன் என்று சொன்னேன். புகார் கொடுத்தது யாரெனில் சம்பவத்தன்று இரவு தஞ்சை காவல்நிலையத்தில் கலையசரன் புகார் கொடுத்தார். என்னை விசாரித்து போலிசார் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு நான் காவல்நிலையம் செல்லவில்லை போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் விசாரித்து என்னை எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். தஞ்சை மருத்துவமனையில் என்னுடன் சேர்ந்து யாரை விசாரித்தார்கள் என்றால் கலையசரனை விசாரித்தார்கள். விபத்து நடந்த இடம் எங்கே என்றால் புதுக்குளத்திற்கும் வாட்சா குஞ்சு காலணிக்கும் இடையே உள்ளது. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R. Rathinavel (signature)

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து /படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

(signature)

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

91

| | | |
|---|---|---|
| Case No. | : | CC.161/2016 |
| | | STC. |
| | | M.C. |
| Deposition of witness | : | PW.5 |
| Name | : | சந்திரசேகரன் |
| Father's /Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | மதுக்கூர் |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day September 2019

**முதல் விசாரணை.**

நான் மதுக்கூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். 20.07.2015 அன்று காலை 06.00 மணிக்கு நானும் இருதயராஜ் என்பவரும் சிவக்கொல்லை புதுக்குளம் அருகே நின்று பேசி கொண்டிருந்தோம் அப்போது மதுக்கூர் காவல்நிலையத்திலிருந்து போலிசார் வந்து கொடியரசன் என்பவர் வாகன விபத்தில் இறந்தது சமபந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பர்ாவைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் வரைந்தார்கள். அதில் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் அந்த பார்வைமகசரில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடைது அந்த பார்வைமகசர் **அசாஆ2**ஆகும். என்னிடம்காட்டப்படும் மாதிரிவரைபடம் சம்பவ இடத்தில் வரைந்தது தான் அது **அசாஆ3** ஆகும. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்தில் நின்றபோது தான் போலிசார் அங்கு வந்தார்கள். எங்களை தவிர வேறு மூன்று நபர்களும் அங்கு இருந்தார்கள். பேலிசாருக்கு முன்பே எனது பெயர் தெரியாது.

நான் அங்கு வேடிக்கை பார்த்து கொண்டிருந்தபோது போலிசார் எங்களை அழைத்து கையெழுத்து கேட்டார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது ஆனால் படத்தை காண்பித்தார்கள். இறந்துபோன கொடியரசன் எனக்கு பழக்கமானவர். அதன் பிறகு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை. சம்பவ இடத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து /படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை